உ

ஓம் ஸ்ரீ ராம ஜெயம்




மூளாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி செல்வரத்தினம் செல்வராணி (பிரிந்தா)

அவர்கள் இறைவனடி சேர்ந்தமை குறித்த

# நினைவு மலர்

26.05.2002

உ

ஓம் ஸ்ரீ ராம ஜெயம்

அமரர் திருமதி

# செல்வரத்தினம் செல்வராணி (பிரிந்தா)



Late Mrs. Selvarani Selvaratnam

| | |
|---|---|
| தாயின் மடியில் | இறைவன் அடியில் |
| 1955 - 03 - 30 | 2002 - 04 - 26 |

## திதிவெண்பா

ஆண்டு சித்திரபானுவில் ஆன சித்திரை இருபத்தாறு
சித்திரா பௌர்ணமித்திதி – ஈண்டு புகழ்
மிக்க எங்களள் செல்வராணி எனும்பிரிந்தா
இறைவனுடன் இணைந்த தினம்.

உ

ஸ்ரீ ராம ஜெயம்



## விநாயகர் வணக்கம்

**மூஷிக வாஹன மோதக ஹஸ்த**
**சாமர கர்ண விளம்பித ஸீத்ர**
**வாமன ரூப மஹேச்வர புத்ர**
**விக்ன விநாயக பாத நமஸ்தே!**

## திருமாலை

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமர ரேறே!
ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான் போய்
இந்திர லோக மாளும்,
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே!

குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி,
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை யிலங்கை நோக்கி,
கடல் நிறக் கடவு ளெந்தை
அரவணைத் துயிலு மாகண்டு,
உடலெனக் குருகு மாலோ
என்செய்கே னுலகத் தீரே!

ஊரிலேன் காணியில்லை
உறவுமற் றொருவரில்லை,
பாரில் நின் பாத மூலம்
பற்றிலேன் பரமமூர்த்தி,
காரொளி வண்ணனே!

கண்ணனே! கதறுகின்றேன்,
ஆருளர் களைக ணம்மா!
அரங்கமா நகரு ளானே!

கொண்டல் வண்ணனைக்
கோவலனாய் வெண்ணெய்,
உண்டவாயன் என்
உள்ளம் கவர்ந்தானை,
அண்டர் கோனணி
அரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள்
மற்றொன்றினைக் காணாவே

குன்றம் மேந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பீதாம்பரன்
சென்று சேர்திருவேங்கட மாமலை
ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே

நம்பனை ஞாலம் படைத்தவனைத் திருமார்பனை,
உம்பர் உலகினில் யார்க்கும் உணர்வரி யான்றன்னை
கும்பி நரகர்க ளேத்துவரேனும் அவர்கண்டீர்
எம்பல் பிறப்பிடை தொழுகுலம் நாங்களே.

## திருப்பல்லாண்டு

வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல்
வந்து மண்ணும் மணமும் கொண்மின்,
கூழாட்பட்டு நின்றீரை எங்கள்
குழுவினில் புகுத வொட்டோம்,
ஏழாட் காலும் பழிப்பில்லோம்
நாங்கள் இராவணன் வாழ் இலங்கை
பாழாகப் படை பொருதானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே;

அரியெனும் கடவுள் வந்தான்
அச்சுத மூர்த்தி வந்தான்,
கருணை செய் நெடியோன் வந்தான்
காத்தருள் கண்ணன் வந்தான்
உரியபுள் ளரசில் ஏறும் ஒரு திருநெடுமால் வந்தான்
திருமகள் கேள்வன் வந்தான்
என்றன சின்னமெல்லாம்

## நோக்கமும் பயனும்

துன்பங்களில் இருந்து விடுதலைபெற குடும்பத்துக்கு நிம்மதி கிடைக்க நோய் நொடிகள் வருமுன்னே தடுக்க பேய், பிசாசுகள் பயம் நீங்க, நீண்ட ஆயுளை இறைவனிடம் வேண்ட ஆன்மாவைச் சுற்றி ஒரு வேலி அமைத்துக் கொள்ள இந்தக் கவசத்தை தினமும் பராயணம் செய்யவும்.

கண்ணன் ஒரு காவல் தெய்வம், நம்பிக்கையோடு பின் பற்றுவோர்க்கு நல்ல துணைவன். அவன் ஆதார புருஷன் ஆதர்ஜ நாயகன். இகலோகத்துக்கும் பரலோகத்துக்கும் அவனே பாலம்.

கடுமையான சோதனைகளுக்குப் பின்னர் மலையளவு புகழையும், பொருளையும் அவன் தருகிறான். யாருடைய ஆசைகளையும் அவன் தடுப்பதில்லை. ஆனால் அவற்றை ஒழுங்கு படுத்துகிறான். அவன் முன்னே தினந்தோறும் படிக்க வெளிவரும் முதற் கவசம் இதுவே.

கண்ணனை நினைப்போர் சொன்னது பலிக்கும். இந்தக் கவசம் படிப்போர் கவலைகள் பறக்கும்.

## ஸ்ரீ கிருஷ்ண கவசம்

அகரம் முதலே அழியாப் பொருளே
ஆயர் குலமே நேயர் கரமே
இகமும் பரமும் இணையும் இடமே
ஈதல் மரபாம் இதயத் தவமே
உலகக் குடையே உயிரின் கலையே
ஊதும் குலலுள் வேதப் பொருளே
எரியும் கனலில் தெரியும் புனலே
ஏழை மனதில் வாழும் அருளே
ஐயம் தீர்க்கும் அறிவுக் கதிரே
ஐவர் துணையே அன்புச் சிலையே
ஒளியே விழியே உயிரே வழியே
ஓடும் நதியில் பாடும் அலையே
அவ்வவ் வுலகை ஆக்கும் நிலையே
அடியேன் சரணம் சரணம் சரணம்
அறமே அறமே அறமே அறமே
திறமே திறமே திறமே திறமே
தவமே தவமே தவமே தவமே
வரமே வரமே வரமே வரமே
வேதம் விளையும் வித்தே விளைவே
நாதம் பொழியும் நலமே நிலமே

ஓதும் பொழுதே உடனே வருவாய்
உள்ளம் கேட்கும் வெள்ளம் தருவாய்
அறியாக் கவலை அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்
பொய்யா மொழியே பொங்கும் நிலவே
பூமிக் குடையின் காவற் பொருளே
பார்த்தன் பணியும் பாதம் காக்க
பாஞ்ச சன்னியம் பக்தனைக் காக்க
மூடர்கள் தமையும் மோகனன் காக்க
முள்ளில் மலராய் முளைத்தோன் காக்க
வாடும் உயிரை மன்னவன் காக்க
தேடும் விழியைத் திருமால் காக்க
கேலிப் பொருளைக் கிருஷ்ணன் காக்க
கண்ணீர் நதியைக் கண்ணன் காக்க
துன்பம் மென்றொரு சுமையைத் தீர்க்க
தூயோன் வருக துணையே தருக
மாதர் கற்பும் மடவார் நோன்பும்
மாயோன் காக்க மலைபோல் வருக
திகிடத் திகிடத் திகிடத் திகவென
தறிபடு துன்பம் தறிகெட ஓட
திகிடத் திகிடத் திகிடத் திகிடத்
திசைவரு கவலை பசைஇல தாக
துருவத் துருவத் துருவத் துரவிடத்
தொலையாப் பொருளே அலையாய் வருக
நிஷ்கா மத்தில் நிறைவோன் வருக
கர்மசத் யாசக் களமே வருக
ஞானம் யோகம் நல்குவன் வருக
நல்லோர் வாழ்வில் நலமே நிறைக
அடியேன் துயரம் அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்
பொங்கும் வேலும் புண்ணாக் காது
பொருந்தும் துயரம் பொடிபடு மாறு
தாங்கும் தலைவன் தாமரைக் கண்ணன்
தாளில் விழுந்தேன் சரணம் சரணம்
மதுசூ தனனே மனிதன் சரணம்
இருடீ கேசா இயலான் சரணம்
கீதாச் சாரிய கிருஷ்ணா சரணம்
வேதாச் சாரிய வேந்தே சரணம்
தேவகி மைந்தா சிறியேன் சரணம்
யசோத குமரா அடியேன் சரணம்
உன்னை விட்டொரு உறவுக ளில்லை
என்னை விட்டொரு இனியவ ளில்லை
நம்மை விட்டொரு நண்பர்க ளில்லை
நன்மையில் உன்போல் நாயக னில்லை

எங்கெங் கேநான் இருந்திடும் போதும்
அங்கங் கேநீ அருள்செய் வருக
கோசலை ஈன்ற குமரா வருக
கோதையின் மாலை கொண்டவன் வருக
ரகுவம் சத்தின் நாயகன் வருக
யதுவம் சத்தின் யாதவன் வருக
மதுவை வென்ற மாதவன் வருக
மலைக்குடி கொண்ட மாலவன் வருக
திருப்பதி யாளும் திருமால் வருக
திருரங் கத்துப் பெருமாள் வருக
இராவணனன் கொடுமை தீர்த்தாய் துன்பம்
'இரா'வணம் எமக்கும் இன்னருள் புரிக
கம்சன் கொடுமை களைந்தோய் வருக
காலனை வெல்லக் கைவலி தருக
நெற்றியில் திருமண் நெஞ்சில் வைரம்
காதில் குண்டலம் கையில் வில்லொடு
தண்டைக் காலில் சலங்கை குலுங்க
அண்டையில் வந்து அருளே புரிக
கௌரவர் தம்மைக் களத்தில் வென்றாய்
கௌரவம் காக்கக் கண்ணா வருக
பார்த்தன் மகிழப் பாடம் சொன்னாய்
படித்தவன் மகிழப் பரமே வருக
மூன்று குணங்கள் முறையாய்க் கூறிய
சான்றோன் பாதம் தாவி யணைத்தேன்
சிக்கென உன்னைச் சேர்த்துப் பிடித்தேன்
பக்கென உந்தன் பாதம் பற்றினேன்
கொக்கென நின்று குறிவைத் திருந்தேன்
அக்கணம் வந்தாய் அடியில் விழுந்தேன்
இக்கணம் என்னை ஏங்க விடாமல்
தக்கவ னேநீ தயவுடன் அருள்க
கல்லாய்ப் போனவள் காலடி பட்டு
பெண்ணாய் ஆனது பிழையே அன்று
உன்னால் தானே உலக இயக்கம்
கண்ணனி லாமல் கடல்வான் ஏது
கண்ணனி லாமல் கடவுளு மில்லை
கண்ணனி லாமல் கவிதையு மில்லை
கண்ணனி லாமல் காலமு மில்லை
கண்ணனி லாவிடில் காற்றே இல்லை
எத்தனை பிறவி எத்தனை பிறவி
அத்தனை பிறவியும் அடியேன் கொண்டால்
சத்திய நாதன் தாள்களை மறவேன்
தத்துவக் கண்ணன் தனிமுகம் மறவேன்
உன்னை நம்பி உனையே சேர்ந்தால்

பிறவிக ளிலைநீ பேசிய பேச்சு
உலகில் போதும் ஒருமுறை மூச்சு
உன்னிடம் சேர்த்து உன்வடி வாக்கு
இங்கே நாங்கள் இருக்கும் வரையில்
சங்கு முழங்கு தர்மம் நிலைக்க
பிள்ளைகள் வாழ்க்கை பிழையா காமல்
மனையவள் வாழக்கை மாண்பு கெடாமல்
இல்லை என்றொரு நாளில் லாமல்
இன்னும் என்னும் ஆசை வராமல்
தொல்லை என்பது துளியு மிலாமல்
தொற்றும் நோய்கள் பற்றிவிடாமல்
முதுமைத் துயரம் மூண்டு விடாமல்
படுக்கையில் விழுந்து பரிதவிக் காமல்
சிந்தனை கெட்டுத் திறைமையும் கெட்டு
நிந்தனை பெற்று நீங்கி விடாமல்
என்றும் பதினா றிளமை வழங்கு
இப்பணி தொடர அற்புதம் காட்டு
தளரா மேனியில் சத்தியை கூட்டு
தாய்போ லிருந்து சாதம் ஊட்டு
வாழ்ந்தால் இப்படி வாழ்வது நன்றென
ஊரார்க் கென்னை உதாரணம் காட்டு
ஊலகில் ஒருவன் உத்தமன் இவனென
ஊயிர்க்ள பேசிடும் ஒருநிலை கூட்டு
சிறியவர் பெரியவர் வறியவர் செல்வர்
சரிசரி சரியெனத் தலையை யசைக்க
பொலிபொலி பொலியெனப் புகழும் விளங்க
மளமள மளவென மானைவிருள் நீங்க
கலகல கலவென காசுகள் சேர
தளதள தளவெனத் தர்மம் தழைக்க
வரவர வரவர வாய்ப்புகள் வாய்க்க
ரகுபதி பசுபதி நன்மைள் அருள்க
ஐயா சரணம் சரணம் சரணம்
அடியேன் வாழ்வில் நீயே கவசம்
கவசம் கவசம் கவசம் கவசம்
வந்தது வழ்வில் மன்னவன் கவசம்
கவசம் கவசம் கவசம் கவசம்
வாழ்க்கை என்றும் கோபுரக் கலசம்
அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம்
அவனே துணையென அறிவோம் அறிவோம்
அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம்
அவனிடம் எதையும் தருவோம் தருவோம்
ஜெயஜெய ராமா ஜெயஜெய கிருஷ்ணா
ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய
ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய!

## மண்ணில் கனவுகள் (வாழ்க்கை வரலாறு)

முத்தமிழின் சுவையாய்ந்து உலகுக்குணர்த்தும் முதறிஞர் வாழும் ஈழ நாட்டில் சிரசாச மிளிரும் யாழ். குடாநாட்டின், வலிகாமம் மேற்குத் திசையில் வரங்களை அள்ளி வழங்கும் வதிரன்புலொ சித்திவிநாயகர் குடிகொண்டுள்ள மூளாய்ப் பதியில் புண்ணிய தீர்த்தத்தைக் கொண்டுள்ள காக்கும் கடவுள் வரதராஜப் பெருமானை குலதெய்வமாகவும், வைஷ்ணவ சமய தத்துவங்களில் தனது மனதை ஈடுபடுத்ததிக் கொண்டவரும், பிரபல வர்த்தகராகவும் இருந்த திரு. நாகலிங்கம் முருகேசு, முருகேசு பரமேஸ்வரி தம்பதியருக்கு தவப் புதல்வியாக அமரர் செ. செல்வராணி (பிருந்தா) 1955ம் ஆண்டு பங்குனி மாதம் 30ம் திகதி அவனியில் அவதரித்தார்.

அமரரின் உடன் பிறப்புக்கள் திரு. மு. வைகுந்தவாசன், திருமதி. ஜெ. முகுந்தா, திருமதி. க. ஸ்ரீறங்கா, செல்வி. வைகுண்டதேவி, திருமதி. து. கிருஸ்ணதேவி, திருமதி. இ. ஸ்ரீஜெயதேவி ஆகியோர் ஆவர். இவர் சிறு வயதிலிருந்து துடிப்புள்ளவராக காணப்பட்டார். இவர் ஆரம்ப கல்வியை யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும், உயர் கல்வியை யா/விக்ரோறியாக் கல்லூரியிலும் கற்றார். கற்கும் போதே இவர் விளையாட்டுத் துறையிலும், பொது வேலைத் திட்டங்களிலும் ஈடுபாடு காட்டினார். இன்று வரை இவரது பொது சேவைக்கு சைவப்பிரகாச வித்தியாலய சமூகம், றெமிங்ரன் கல்வி வளர்சோலை, மூளாய் கிழக்கு ஐக்கிய நாணய சங்கம், சைவப் பிரகாச வித்தியாலய பழைய மாணவர் சங்கம் ஆகியோரின் அஞ்சலி அலைகள் சான்று பகர்கின்றன.

அமரர் அவர்கள் 1982.01.29 இல் தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு நாகலிங்கம் செல்வரட்ணம் என்பவரை மணம் புரிந்தார். அதன் பயனாக நான்கு செல்வங்களை பெற்றெடுத்தார். [ஜனார்த்தனன் (கொழும்பு), செல்வநாத் (2003 A/l), அனார்த்தனன் (தரம் - 11), அரிச்சுணா (தரம் 9) ஆகியோர்]. இவர் நோய்வாய்ப் பட்டிருந்த சமயத்திலும் குடும்பத்தின் செயற்பாடுகளில் சுறுசுறுப் பாகவே இருந்தார்.

இவரது இளமைக்காலத்திலேயான பிரிவு எல்லோருக்கும் மனவேதனையைத் தந்த போதும் இவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரந்தாமனை வேண்டுகிறோம்!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

# மனத்திடம் மிக்க மங்கை நல்லாள்

தான்பெற்ற செல்வங்கட்கு பாசமிகு தாயாக, கணவனுக்கு அன்புடைய மனைவியாக, பெற்றோருக்கு பண்புடைய மகளாக, சகோதரர்கட்கு நல்லதொரு உடன்பிறப்பாக வாழ்ந்துகாட்டிய பிருந்தா இன்று எங்கே? எம்பாடசாலையின் உயர்வுக்காக முன்னின்று உழைத்த உத்தமியின் இடத்தை நிரப்ப யாருளர்? தனக்கு சமூகம் என்ன செய்தது என்று நோக்காது சமூகத்துக்காக தன்னை அர்ப்பணித்த பெண்மணி இன்று பூதவுடல் நீத்து புகழுடம்பு எய்தி விட்டார்.

பிருந்தாவின் உடல் நலம் மிகவும் பாதிப்படைந்துள்ளது என்ற திடீர் செய்தி கேட்டு திகைப்படைந்து அவரது வீடு சென்றேன். அவரது நிலை கண்டு கலங்கிநின்று அவரது உடல் நலம் பற்றி விசாரித்த போது அவர் அதனை மறந்து எமது பாடசாலை பற்றியும், பாடசாலை ஆசிரியர்களின் சேவை பற்றியும் மூன்று மணித்தியாலங்கட்கு மேல் கதைத்தது கண்டு வியந்தேன். தன் உடல்நிலை இவ்வளவு பாதிப்படைந்த வேளையிலும் தனது பிள்ளைகளையோ தனது நிலையையோ பற்றி சிறிதும் சிந்திக்காது சமூக சேவையிலேயே கருத்தூன்றி நின்றது அவரது சேவையின் மகத்துவத்தை எடுத்துக் காட்டியது. பிறர் பிள்ளை தலைதடவ தன்பிள்ளை தானே வளரும் என்பதற்கமைய அவரது செல்வங்கட்கு நல்வழியுண்டு. சிறப்பு மிகு உயர்வுண்டு.

**அவரது ஆத்மா சாந்தி பெறுக.**
**ஓம் சாந்தி சாந்தி சாந்தி.**

ஊனாகி உயிராகி யதனுள் நின்ற
ஊணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவுந் தீயனவுந் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை அடையப் பெற்றால்
அல்ல கண்டம் கொண்டடியேன் என்செய்கேனே.

**இப்படிக்கு**
**திருமதி. ர. சோதிலிங்கம்,**
**அதிபர்,**
**யா/மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை,**
**சுழிபுரம்.**

**அமரர் திருமதி செல்வரட்ணம் செல்வராணி**
அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதில் எமது இந்து இளைஞர் மன்ற சிறுவர் பாடசாலை மிகுந்த பெருமையுடன் ஆறுதல் அடைகின்றது. அமரர் அவர்கள் மாதர் சங்க தலைவியாய் அமர்ந்திருந்து ஆற்றிய சேவையை எங்கள் கிராமம் மட்டுமன்றி அயல்கிராமமும் அறியும். ஆமரர் அவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்தவராகவும் அன்பு, பண்பு, ஒழுக்கம், சயப்பணி என்பவற்றில் சிறந்து விளங்கினார். வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தாலும் துய்த்தல் அரிது, என்பதற்கமைய இயற்கை எய்திய அம்மையாரின் அடிச்சுவடுகள் எமக்கு வழிகாட்டியாய் அமையும். இல்லறம் என்னும் நல்லறத்தில் சிறந்து விளங்கிய ஒளி விளக்காய்ப் பிரகாசித்து அணைந்துவிட்ட அம்மையாரின் நினைவு எம்மைவிட்டு ஒருபோதும் நீங்காது.

அம்மையாரது குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினர்கட்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்கின்றோம்.

“நெருநல் உளன் ஒருவன் இன்று
இல்லை என்னும் பெருமை பிறரிற்குவரு”

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி.

**மாதர்சங்கம் மூளாய்**
**மன்றமும், ஆசிரியரும்.**

**எம் நெஞ்சங்களில் நிறைந்து நிற்கும் உறவிற்கு ......**

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரமபுரத்தை உகந்தனையே.

ஈழமணித் திருநாட்டின் சிகரமெனத்திகழும் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பதிதனில் விநாயகரும் வெற்றிவேலாயுதரும அருள்புரிய கற்றோரும் மற்றோரும் மூத்தோரும் குடியிருக்கும் மூளாய்

பதிதனிலே, வைகுண்ட பதியதனில் வந்துதித்தார் முருகேசு தம்பதியினரின் மூத்தமகள் செல்வராணி.

பிருந்தா என மறுநாமம் பெற்ற இவர் பிறருக்கெல்லாம் கரம் கொடுத்தார். கிராமத்தின் அபிவிருத்திக்கு அயராது பாடுபட்டார். மானிடத்தின் மகத்துவத்தை மக்களிற்கு காட்டி நின்றார்.

அறிவு வழி தந்தைவழி என ஆன்றோர் நெறிப்படியே எம் தந்தை வழிதனிலே உறவோடு கலந்து நின்ற உத்தமியே எம் மனைதனிலே மங்கள நிகழ்வுகளை மாண்புற நெறிப்படுத்தி பண்போடு, பாசத்தோடு அன்போடு, அரவணைத்து நோய் பிணியால் நொந்து சோர்ந்து மீண்டும் வராத வழிதனிலே சென்றுவிட்ட உம் உறவிற்கு கண்ணீர்ப் பூக்களை நாம் காணிக்கை ஆக்குவதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல பரந்தாமன் திருப்பாதங்களை வேண்டுகிறேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இங்ஙனம்
ப. சிவப்பிரகாசம்
சித்தப்பா குடும்பம்.

**எம் இதய அஞ்சலி**

அமரத்துவம் எய்திய திருமதி செல்வராணி செல்வரத்தினம் அவர்கள் (பிருந்தா) எங்கள் மூளாய் கிழக்கு ஐக்கிய நாணய சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினராக இருந்து சங்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்த உறுப்பினராவர். தனது குடும்பப் பொறுப்புகளோடு அவர் பல்வேறு சமூக வேலைகளிலும் தொண்டாற்றிவர்.

தான் சுகயீனமுற்று இருந்து காலத்திலும், தன் மரணம் எந்த நேர்திலும் ஏற்படலாம் என்று தெரிந்த பின்னும் தன் குடும்பத்தை திறம்பட நிர்வகித்து வந்தவர். எல்லாவற்றிற்கும் மேலாக தனது மகளின் சாமத்தியச் சடங்கை சிறப்பாகச் செய்யவேண்டும் என்று மனத்திடத்துடன் செய்வித்தார். அவர் தனது தாய், தகப்பன், சகோதரங்களையும், தனது கணவர் பிள்ளைகளையும் அன்புடன் நேசித்து தனது கடமைகளைச் செய்தவர்.

அன்னாரின் மறைவு அவர் குடும்பத்தினருக்கும், எங்கள் சங்கத்திற்கும் ஈடுசெய்யமுடியாத ஒன்றாகும். அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தி. முருகதாஸ்.
மூளாய் கிழக்கு ஐக்கிய நாணய சங்கம்.

## பெண்குலத்திற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து அமரத்துவமடைந்த திருமதி செல்வரட்ணம் செல்வராணி

இவர் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்க நிர்வாகசபை உறுப்பினராக ஆயுள்கால அங்கத்தவராக இருந்து தனது ஆயுள்வரை எமது பாடசாலைக்கு தொண்டாற்றினார். இவர் பாடசாலையின் வளர்ச்சிக்காக அல்லும், பகலும் உழைத்தவர். இவர் எமது சங்கத்திற்கு பெண் உறுப்பினராக இருந்து தாய்க்குலத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக பெண்களும் பொதுச் சேவையில் எப்படி ஈடுபடவேணும் என்பதை எடுத்துக்காட்டியுள்ளார். பிருந்தா அவர்கள் எமது பாடசாலையின் அபிவிருத்தி சங்கம் ஊடாகவும் சேவைகள் புரிந்துள்ளார். எமது பாடசாலை சமூகத்தின் நன்மதிப்பை பெற்றவர். பெருந்தகை பிருந்தா அவர்கள் இவர் தான் மட்டும் அல்ல எமது பாடசாலைக்கு அவருடைய அண்ணன் வைகுந்தவாசன் அவர்கள் லண்டன் மாநகரிலும் பெரும் பட்டங்கள் பெற்று எமது பாடசாலைக்கு நன்மதிப்பைப் பெற்றுத் தந்துள்ளார். இவரின் சகோரிகள் அனைவரும் எமது பாடசாலையின் பழைய மாணவர்களே. இவருடைய அன்புச் செல்வங்கள் இப்பொழுது எமது பாடசாலையில் கல்விகற்று வருகின்றார்கள். இவர் பாடசாலையில் மட்டும் அல்ல கிராமத்தில், பொதுஸ்தாபனங்கள் ஊடாக பெரும் சேவைகள் புரிந்துள்ளார் என்பதை நினைவு கூறுகின்றோம். காலன் வெகு சீக்கிரத்தில் அவர் ஆவியை கவர்ந்தது எல்லோர்க்கும் பேரதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் தந்துள்ளது. அவரின் அளப்பரிய சேவையில் பாடசாலை வளர்ச்சியில் அவர்கொண்ட ஆர்வத்தை நாம் என்றும் மறவோம். அன்னாரின் இழப்பு குடும்பத்துக்கு மட்டும் அல்ல மூளாய் கிராமத்துக்கும், எமது பாடசாலைக்கும் ஓர் பேரிழப்பு. இந்த இழப்பை ஒருபோதும் ஈடுசெய்யமுடியாது. துயரித்து இருக்கும் அனைவருக்கும் எமது சங்கத்தின் சார்பில் அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் முத்துக்குமார சுவாமியை பிரார்த்திக்கின்றோம்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று.

**க. பாலச்சந்திரன்**
**தலைவர்**
**பழைய மாணவர் சங்கம்**
**மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை.**

## கணவர் புலம்பல்

அன்புடைய நாயகியே உம்மை இன்று
அவனியிலே இழந்துவிட்டேன் ஆற்றுவேனோ
என்புருகி மனம் நொந்து இங்கு நானும்
ஏங்கி அழுவதற்கு என்ன பாவம் செய்தோ?
பரிவுடனே என்னைக் காத்து கதைகள் கூறிப்
பட்சமுடன் பட்சணங்கள் தந்து வாழவைத்தீர்
கவலையுடன் நான் இங்கிருந்து வாடுவதற்கு
கண்மணியே என்ன பிழை செய்தேனம்மா?

## பிள்ளைகள் புலம்பல்

பெற்றவளே அன்னையே பேணி எமை வளர்த்தவளே
நாம் கற்றுயர்க் கடும் வியர்வை உதிர்த்தவளே
கண்ணாரும் குணமுடையீர் தரணி மீது
தாயே உனைப்போல் நாமும் கண்டதில்லை
கல்வியோடு செல்வதைப் பெற்றுவாழக்
கருத்துடனே எமக்குழைத்த அரிய தாயே!
விண்ணாடு செல்வதற்கு மனம் வைத்தீரோ
வேதனையால் துடிக்கின்றோம் எங்கள் தாயே
இல்லையொரு துணையென நாம் ஏக்கம்கொள்ள
எங்கே நீர் சென்றுள்ளீர் இயம்புவீரே
எல்லை இல்லாப் பரம்பொருளை உம்மிற் கண்டோம்
எமக்கினிமேல் துணைசெய்ய யார்தா னுள்ளார்
நற்றவத்தின் பயனன்றோ நாமுமக்கு வாய்ந்ததென்பீர்
பொற்பதமே பற்றிநாம் போனஇடம் கேட்டழுதோம்
கேட்கலையோ எம்துயரம் கேட்டிடவே வருவீரோ.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

## மகளை தேடும் தாய் தந்தை

மகளே மூத்த புதல்வியாய் எமக்குதித்தீர்
துள்ளி ஓம் இளமையை கண்டோம்
வாழ்க்கை ஓடத்தில் நீர் ஏறி
வளமுடனே வாழ்வது காணக்கண்டோம்
நித்தமும் நோயால் நாம் வருந்தும்போது
நீர் இருந்து பராமரித்த காத்துவந்தீர்
எத்தனை பிள்ளை எமக்கிருந்தாலும் உம்மைப்போல்
எனக்கினியார் உலகில் காணோம்
அத்தனையும் அன்னைபோல் அன்புகாட்டி
பாசமதை சொரிந்தீரே மறக்கமாட்டோம்
இத்தருணத்தில் எம்மை தவிக்கவிட்டு
சென்றீரே நாம் தவிக்கின்றோம்.

## பெறாமக்கள் பெருக்கும் கண்ணீர

பெரியம்மா, பெரியம்மா என்றே நாமழைத்தால்
சித்தம் மகிழ்ந்தீர் சிறியேம் நாங்கள்
மெத்த மகிழ வேண்டியது தந்தீர்கள்,
அன்பு மொழியால் ஆதரவு அழித்தெம்மை
துன்பம் தொடராது வாழ்வித்த பெரியம்மா
நேற்றிருந்தீர் இன்றில்லை எங்கே போனீர்
ஆற்றுவது அறியாது அனாதைகள் ஆனோமே
போற்றுவாரெவருமின்றி போனோமே நாங்கள்
கள்ளங் கபடமற்ற கற்கண்டு மொழியின்றி
வெள்ளம் பொழியுதே எம் விழிகள்
அம்மா போல் எம்மை அரவணைத்தீர்
இனி எப்போ அரவணைக்க வருவீரோ





## நன்றி நவிலல்

எம்மை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தலைவியின் ஈமக் கிரியைகளில் நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் சோகத்தில் இருந்த எம்மை தேறுதல் கூறியோருக்கும், தேவார பாக்கம் பாடியோருக்கும், இரங்கல் உரை ஆற்றியோருக்கும், பூதவுடலை சுமந்து சென்றோருக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும், ஆகாரங்கள் நல்கியோருக்கும் மிக்க நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்ளுகின்றோம். மற்றும் அந்தியேட்டி, சபீண்டிகரணம் ஆகியவற்றில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், மற்றும் இம்மலரை குறுகிய காலத்தில் அச்சிட்டுத்தந்த **பண்டத்தரிப்பு ஜே. எஸ். அச்சகத்தினருக்கும்** எமது உள்ளத்தின் உணர்வினால் ஊறிய நன்றிகளை அன்புடன் தெரிவித்து கொள்கிறோம்.

மூளாய் கிழக்கு,
சுழிபுரம்

இங்ஙனம்,
கணவன், பிள்ளைகள்,
தாய், தந்தையர் மற்றும்,
குடும்பத்தினர்.

# வம்சவிருட்சம்

**நாகலிங்கம் முருகேசு + பரமேஸ்வரி**


- வைகுந்த வாசன் (இலண்டன்)
- **அமரர் செல்வரத்தினம் செல்வராணி**
- ஜெயசோதி முகுந்தாதேவி (கொழும்பு)
- கனகநாதன் ஸ்ரீரங்காதேவி (கனடா)
- ஸ்ரீ வைகுண்டதேவி
- துரைராசா கிருஷ்ணதேவி (மூளாய்)
- இரகுநாதன் ஸ்ரீ ஜெயதேவி (கொழும்பு)

**நாகலிங்கம் + நாகம்மா**

- நாகலிங்கம் செல்வரத்தினம்
- இரத்தினசிங்கம் நாகேஸ்வரி (லண்டன்)
- நாகலிங்கம் கருணாகரன் (சுவிஸ்)
- ஜீவரட்ணம் நகுலாம்பி (மாதகல்)
- வரதராசா நவலீலா (ஜேர்மனி)

**அமரர் செல்வரத்தினம் செல்வராணி** (நாகலிங்கம் செல்வரத்தினம்)

- ஜெனாத்தனன்
- செல்வநாத்
- அனாத்தனன்
- அரிச்சனா



நீ ஏன் அவசியமின்றிக் கவலைப்படுகின்றாய்?
யாருக்காக நீ பயப்படுகின்றாய்?
உன்னை யார் அழிக்க முடியும்?
ஆத்மாவிற்குப் பிறப்பும் இல்லை, இறப்புமில்லை
எது நடந்ததோ அது நன்மைக்காகவே நடந்தது
எது இப்போது நடந்து கொண்டிருக்கின்றதோ அதுவும்
நன்மைக்காகவே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.
எது நடைபெற இருக்கின்றதோ அதுவும் நன்மைக்காகவே நன்றாக நடக்கும்
நடந்ததை எண்ணிக் கவலை கொள்ளாதே
நடப்பதைப் பற்றிச் சலனம் கொள்ளாதே
நீ எதை இழந்து விட்டாய் என்று இப்போ நீ அழுகின்றாய்?
நீ எதைக் கொண்டு வந்தாய் அதை இழந்துவிட
நீ எதை உருவாக்கினாய் அது அழிந்துபோக,
நீ எதையும் கொண்டு வரவில்லை.
உன்னிடம் இருப்பதெல்லாம் இங்கிருந்து பெற்றவை.
உனக்குக் கொடுக்கப்பட்டதெல்லாம்
இங்கிருந்து கொடுக்கப்பட்டவை.
நீ எடுத்துக் கொண்டதெல்லாம் இப்பிரபஞ்சம்
உனக்கு வழங்கியவை.
உன்னால் அளிக்கப்பட்டதெல்லாம்
இந்தப் பிரபஞ்சத்திற்காக அளிக்கப்பட்டவை.
வெறுங்கையோடு வந்தாய்,
வெறுங்கையோடு போகப் போகிறாய்
இன்று உன்னுடையது எதுவோ
அது நேற்று வேறொருவருடையது
நாளை மற்றொருவருடையதாகும்.
இது உன்னுடையது என்று நினைக்கின்றாய்.
இதனால் அதிக ஈடுபாடும் கொண்டுள்ளாய்.